Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 082 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 21.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# 70 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



புதுடெல்லி:பிஎம்விக்சித் பாரத் ரோஜ்கர் யோஜனா திட்டத்தில் இதுவரை 70 லட்சம் பேர் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.கடந்த 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் 1-ம் தேதி பிஎம் விக்சித் பாரத்ரோஜ்கர்யோஜனா திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி தனியார் நிறுவனங்களில் புதிதாக பணியில் சேரும் இளைஞர்களுக்கு மத்திய அரசு சார்பில் ரூ.15,000 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் நிதி வழங்கும் விழா டெல்லியில் நேற்று நடைபெற்றது.இதில்பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று நாடு முழுவதும் 15 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.2,400 கோடி ஊக்கத் தொகையை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது: தொழில் துறை, தொழிலாளர்கள் இடையே பிஎம் விக்சித் பாரத் ரோஜ்கர் யோஜனா திட்டம்பாலமாகசெயல்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 70 லட்சம் பேர் வேலைவாய்ப்பினை பெற்று உள்ளனர். தனியார் நிறுவனங்கள் இத்திட்டத்தில் ஆர்வமாக பங்கேற்று புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன. இன்றைய உலகம், இந்தியா மீது பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது. இந்திய இளைஞர்கள் தங்களின் படைப்பாற்றல் மற்றும் திறன்களின் மூலம் உலகத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும். வரும் 2047-ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து உள்ளோம். இந்த இலக்கை எட்ட இந்திய இளைஞர்களும் நாட்டு மக்களும் கடினமாக உழைக்க வேண்டும். 6 மாத இடைவெளியில் இரு தவணைகளாக ஊக்கத் தொகை வழங்கப்படும். மேலும் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு வேலைவாய்ப்புக்கு ரூ.3,000 என்ற வகையில் மாதந்தோறும் ஊக்கத் தொகை வழங்கப்படும். இந்த தொகை 2 ஆண்டுகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும்.இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

# ‘நான் முதல்வன்’ திட்டத்தை முடக்குவது இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயல்; தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கண்டனம்



"நான் முதல்வன் திட்டத்தை முடக்குவது தமிழக இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயலாக அமைந்துவிடும்" என தவெக அரசுக்கு முன்னாள் முதல்வரும், திமுக தலைவரு மான மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்து ள்ளார்.


கும்பகோணம் பள்ளியில் கடந்த 2004-ஆம் ஆண்டு நடந்த பயங்கர தீவிபத்தில் இருந்து, தப்பிய ஜெனிபர் என்ற சிறுமிஇப்போதுதுணை ஆட்சியராக பதவியேற்கவுள்ளார். இவரது வெற்றிப் பயணம் குறித்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் தனது அனுபவத்தைப் பகிர்ந்துள்ள ஜெனிபர், "ஆரம்பக் காலத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத சூழல் இருந்தது.

அப்போது, தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் எனக்குக் கல்வி உதவித்தொகை கிடைத்தது. அதன் மூலம் அடையாறில் எட்டு மாதங்கள் தங்கிப் பயிற்சி பெற்றேன். அதன் பின்னரே என்னால் குரூப்-1 தேர்வில் வெற்றி பெற்று, இன்று இந்த இடத்துக்கு வர முடிந்தது," என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். இந்த வீடியோவை மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்து, "நீங்கள் (தவெக அரசு) 'நான் முதல்வன்' சோஷியல் மீடியா பக்கங்களின் பெயரை மாற்றலாம். அதில் இருந்த பதிவுகளை டெலிட் செய்யலாம். ஆனால், இதுபோல ஆயிரம் ஜெனிபர்களின் கனவை நனவாக்கிய நான் முதல்வன் திட்டத்தின் சாதனைகளையும் நன்றியுணர்வையும் மக்கள் மனங்களில் இருந்து டெலிட் செய்யவே முடியாது. அவை அவர்களின் இதயத்தில் ஆழமாக Archive செய்யப்பட்டுவிட்டன.

கடந்த 5 ஆண்டுகளாக,எனது ஆட்சிக்காலத்தில் "படிங்க, படிங்க, படிங்க" என்று தொடர்ந்து சொல்லி வந்தேன்.அப்படிபடித்து முன்னேற விரும்பும் இளைஞர்களுக்கு உதவத்தான் நான் முதல்வன் எனும் என் கனவுத் திட்டத்தைத் தொடங்கினேன். அதனை முடக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயலாக அமைந்துவிடும்!" என்று தவெக அரசை அவர் எச்சரித்துள்ளார்.

# தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறியது இந்திய யூனியன் முஸ்லிம் லீக்



தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு 2026 ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் நடந்து முடிந்த தேர்தலில், தி.மு.க. தலைமையிலான கூட்டணி, அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய கூட்டணி போட்டியிட்டன. தமிழக வெற்றிக்கழகம் மற்றும்நாம்தமிழர்கட்சி தனித்து போட்டியிட்டன. இது தவிர டாக்டர் ராமதாஸ்,சசிகலாஇணைந்து ஒரு கூட்டணி அமைத்தும் போட்டியிட்டனர்.

எனினும் களத்தில் 4 முனை போட்டி ஏற்பட்டது. அதிலும் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. கட்சிகளிடையே கடும் போட்டி இருந்தது.அரசியல்கட்சிகளின்வேட்பாளர்களுடன், சுயேச்சை வேட்பாளர்களும் சேர்ந்து 234 தொகுதிகளிலும் 4 ஆயிரத்து 23 பேர் தேர்தலில் களம் கண்டனர். இந்த தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை முடிவில், மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் முதல் முறையாக தேர்தலில் களம் கண்ட தமிழக வெற்றிக்கழகம் 108 தொகுதிகளை வென்று முதல் இடம் பிடித்தது. கடந்த முறை ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க. கூட்டணி 73 தொகுதிகளில் வெற்றி பெற்று 2-வது இடமும், அ.தி.மு.க. கூட்டணி 53 தொகுதிகளில் வெற்றி பெற்று 3-வது இடமும் பிடித்தன. இந்நிலையில், தி.மு.க. கூட்டணியில் இருந்த காங்கிரஸ், வி.சி.க., இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம்லீக்கட்சியின் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சியமைத்தது. சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது பெரும்பான்மையையும் நிரூபித்தது.

இந்த நிலையில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தி.மு.க. கூட்டணியில் இருந்து இன்று வெளியேறி உள்ளது. தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு,அக்கட்சி 2 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில்,கட்சிபொதுக்குழு இன்று நடைபெற்றது. இதில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், ஒன்றாக தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் முடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி எடுத்துள்ளது.

இன்றுள்ள அரசியல் சூழலில் தி.மு.க. கூட்டணியில் தொடர இயலாது. இடைத்தேர்தல், உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கும்போது கூட்டணி பற்றி முடிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. அக்கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ. ஷாஜகான் த.வெ.க. அரசில் அமைச்சராக உள்ளார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு; வானிலை ஆய்வு மையம்



6 மாவட்ட ங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை:

சுமார் 5.8 கிமீ உயரத்தில் வடக்கு கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல காற்றழுத்த சுழற்சி நிலவுகிறது.

சுமார் 3.1 கிமீ உயரத்தில் வடக்கு லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகாற்றழுத்த சுழற்சி நிலவுகிறது.

22-06-2026: தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

22-06-2026: தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

23-06-2026 மற்றும் 24-06-2026: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

25-06-2026 மற்றும் 26-06-2026: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், (19.06.2026) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 768.0 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 19.06.2026 முடிய 178.6 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 55.32 அடியாகவும், 5.83 மி. கன அடிநீர் இருப்பும் உள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மைவிரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், பயிர் சாகுபடிக்குத் தேவைப்படும் பூச்சி மருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் பயனாளிகள் அனைவரும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே, பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள எண் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பி.எம்.கிசான் கணக்குடன் நிலம் தொடர்பான விபரங்களை இணைத்தல், ஆதார் விபரங்களை வங்கிக் கணக்குடன் இணைத்தல் மற்றும் தங்களது அடையாளத்தை இணைய வழியில் உறுதிபடுத்துதல் (eKYC) போன்ற விபரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் என தெரிவித்தார்.


வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு, அத்திட்டத்தின் பயன்களை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் 61601 தெரிவிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் சார்பாக நானோ யூரியா, நானோ டி.ஏ.பி மற்றும் நுண்ணூட்டங்கள் குறித்தான கருத்துக்கண்காட்சியினை பார்வையிட்டார்.

நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து. 70 கோரிக்கை மனுக்கள் பெற்று மேல் நடவடிக்கைக்காக உரிய அலுவலர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் இரா.சிவக்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் கந்தராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சி.லோகநாதன், ஈரோடு வேளாண் விற்பனைக்குழு செயலாளர் கலைச்செல்வி, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர், வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறையின் செயற்பொறியாளர். விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப்பிரதிநிதிகள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய தேர்வு முகமையால் (NTA) NEET (UG) மறுதேர்வு:

# தேர்வு மையங்களில் தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு அளவில் செய்யப்பட்டுள்ளது



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு– 2026 ஈரோடு மாவட்டத்தில் தேசிய தேர்வுமுகமையால் (NTA) – NEET (UG) – – மறுதேர்வு 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை இன்று பிற்பகல் 02.00 முதல் 05.15 வரை 13 தேர்வு மையங்களில் நடைபெற உள்ளது. இதில் 4270 தேர்வர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

தேர்வு மையங்களில் தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு அளவில் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தேர்வு மையங்களிலும் பேருந்துகள் நின்று செல்லும் வகையிலும் சிறப்பு பேருந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், மருத்துவக்குழுக்கள், காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. தேர்வு எழுதும் மாணவர்கள் முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரைமட்டுமே தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படுவர். தேசிய தேர்வு முகமைவிதிமுறைகளை முழுமையாக கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வர்களின் அனுமதிச் சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தேர்வு நாளான 21.06.2026 அன்று குறித்த நேரத்தில் மட்டுமே தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படுவர். மேலும், தேர்வர்கள் நுழைவாயிலில் முழு பரிசோதனைக்கு பிறகு தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

## கோவை அரசூர் பகுதியில் உள்ள

## கே.பி.ஆர். கல்விக்குழுமங்களின் சார்பில்

# சாதனையாளர்களுக்கான லெகஷி விருது வழங்கும் விழா நடந்தது



கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கல்விக்குழுமங்களின் சார்பில் பல்துறைச் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் லெகஷி விருது வழங்கும் விழா கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. கேபிஆர் கல்விக்குழுமங்கள் ஆண்டுதோறும் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய சாதனையாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குச் சிறந்த ஆய்வறிஞர், இளம் நட்சத்திரச் சாதனையாளர், வாழ்நாள் சாதனையாளர், சிறந்த பேராசிரியர் மற்றும் சிறந்த முன்னாள் மாணவர் போன்ற பிரிவுகளின்கீழ் விருதினையும் பரிசுத்தொகையினையும் வழங்கி வருகிறது. இவ்வாண்டு நடைபெற்ற லெகஷி விருதிற்கு 14 மாநிலங்களிலிருந்து 1200க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர். அவ்விண்ணப்பங்களை, நடுவர் குழுவினர் முறைப்படுத்தி, விருதிற்கான விதிமுறைகளின் அடிப்படையில் தேர்வுசெய்தனர். அதில்அமெட்நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வி.ராஜேந்திரன் வாழ்நாள் சாதனையாளர் விருதுடன், 50,000 ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. சிறந்த பேராசிரியர் விருதிற்கான பிரிவில், பாலக்காட்டில் உள்ளஇந்தியன்தொழிற்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் டாக்டர் சாந்தக்குமார்மோகன் மற்றும் வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் ஜெயகிருஷ்ண கந்தசாமி முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதும் 25,000 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. சிறந்த ஆய்வறிஞர் பிரிவில் பாரதியார் பல்கலைக்கழக வணிகவியல் புலமுதன்மையர் டாக்டர் எம்.சுமதி, காருண்யா அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப நிறுவனத்தின் வேதியியல் துறைப் பேராசிரியர் டாக்டர் ஆர்.நந்தகுமார், தன்பாத் இந்தியன் தொழிற்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் டாக்டர் பார்த பிரத்திம் ராய், பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் கார்த்திகேயன் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதும் 25,000 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. இளம் நட்சத்திரச் சாதனையாளர் பிரிவில் கலசலிங்கம் கல்வியியல் மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தின் இணைப்பேராசிரியர் டாக்டர் ஆர்.ராஜசுப்பிரமணியன், எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப நிறுவனத்தின் இணைப்பேராசிரியர் டாக்டர் எஸ். சாம் டேவிட் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதும் 25,000 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. சிறந்த முன்னாள் மாணவர்களுக்கான பிரிவில் கேபிஆர் கல்விக்குழுமத்தைச் சார்ந்த, தனவிக்னேஷ், ரத்னசபரீஷ், பிரேம்குமார், பிரியவர்ஷனா முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதும் 25,000 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. இவ்விருது வழங்கும் விழாவிற்குக் கேபிஆர் கல்விக்குழுமங்களின் தலைவர் டாக்டர் கே.பி.இராமசாமி, குமரகுரு நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் ஆகியோர் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார்.



# வேப்பூர் அருகே பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியை புறக்கணிக்கும் அரசு பேருந்து; திருப்பெயர் கிராம மக்களின் கோரிக்கைக்கு தீர்வு எப்போது?

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே உள்ள திருப்பெயர் கிராமத்திற்கு இயக்கப்படும் 27–ஆம் எண் அரசு பேருந்து, பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதிக்குள் செல்லாததால் அப்பகுதி மக்கள், மாணவர்கள், பெண்கள் மற்றும் தொழிலாளர்கள் சிரமம் அடைந்து வருவதாக கூறப்படுகிறது. இதையடுத்து, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் விருத்தாச்சலம் மாவட்ட செயலாளர் வீர திராவிடமணி ஆலோசனையின் பேரில், விசிக நிர்வாகிகள் சாமிதுரை, சேவாக் ஆகியோர் தலைமையில் திருப்பெயர் கிராம பொதுமக்கள் மற்றும் கட்சியினர் விருத்தாச்சலம் அரசு போக்குவரத்து கழக கிளை மேலாளரிடம் கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில், 27–ஆம் எண் அரசு பேருந்தை பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதிக்கும் இயக்கி, அனைத்து மக்களுக்கும் சமமான போக்குவரத்து வசதி கிடைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



விபத்தில்லா கன்னியாகுமரியை உருவாக்கும் என்ற உயரிய இலக்கை நோக்கி, கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.ஸ்டாலின் தலைமையில், மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் சாலை பாதுகாப்பு தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாலை பாதுகாப்பு என்பது காவல்துறையின் பொறுப்பு மட்டுமல்ல பொதுமக்கள் இணைந்து செயல்படும் போது மட்டுமே விபத்தில்லா சமூகத்தை உருவாக்க முடியும்" என்று வலியுறுத்தினார்.

# கோவை ஆனைகட்டியில் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி, விளையாட்டு உபகரணங்கள் உதவி வழங்கும் விழா நிகழ்ச்சி

## பெண் சமூக ஆர்வலரின் நெகிழ்ச்சி செயலால் மகிழ்ச்சியடைந்த மலைவாழ் மக்கள். மற்றும் குழந்தைகள்



கோவை மாவட்டம் ஆனைக்கட்டி மலைப்பகுதியில் உள்ள கோபனாரி பழங்குடியினர் கிராமத்தில் இயங்கி வரும் நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு, இளம் தொழிலதிபரும் விவசாயியுமான சமூக ஆர்வலர் உமா மகேஷ்வரி என்பவர் நெஞ்சார உதவிக்கரம் நீட்டியுள்ளார். தனது தோட்டத்திற்குச் செல்லும் வழியில் இப்பள்ளியைக் கடந்து சென்ற உமா மகேஷ்வரி, அங்கு பயிலும் மாணவ மாணவிகளுக்கு அத்தியாவசிய தேவைகள் இருப்பதனை அறிந்துள்ளார். இப்பள்ளியில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய சூழலில் உள்ள பழங்குடி சமூக குழந்தைகள் பெருமளவில் படிக்கின்றனர். இக்குழந்தைகளின் நிலையை உணர்ந்து, இப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் தேவையான நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கிரிக்கெட் மட்டை, பந்துகள், ஸ்டம்ப்புகள், கைப்பந்துகள், கால் பந்துகள், எறி பந்துகள், டெனிகாய்டு, செட்டில் கார்க் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை நேரில் சென்று வழங்கினார். இதுகுறித்து பேசிய உமா மகேஷ்வரி, "பழங்குடியின கிராமப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு உதவிகள் மிகவும் அவசியம் என்றும் குழந்தைகளின் கல்வி மேம்பாடு ஒட்டுமொத்த தலைமுறையையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல உதவும் எனவும் தெரிவித்தார். பழங்குடிகள் வாழ்வியல் வளம் பெற, பழங்குடிகுழந்தைகளின் கல்விக்கு தொடர்ந்து உதவதாக தெரிவித்த அவர், கல்வியே தலைமுறைகளை காக்கும் ஆயுதம் என்றார் . அதன் அடிப்படையில், பழங்குடிகள் தலைமுறை செழிக்க கல்வி அவசியம் என்றும் அதற்கு தொடர்ந்து உதவுவதாக சமூக ஆர்வலரான உமா மகேஷ்வரிதெரிவித்தார். பொருளாதாரச் சுமையால் தவித்த தங்களுக்கு, தேடி வந்து உதவிய சமூக ஆர்வலர் உமா மகேஷ்வரியின் இந்த நற்செயலுக்கு, பள்ளி ஆசிரியர்கள், ாணவ–மாணவிகள் மற்றும் பழங்குடியினப் பெற்றோர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# டெலிகிராம் செயலி வாயிலாக போலி நீட் வினாத்தாள் விற்ற மாணவர் கைது




ஜெய்ப்பூர்: டெலிகிராம் செயலி வாயிலாக போலி நீட் வினாத்தாள் விற்பனை செய்த மாணவர் ஆகாஷ் சவுத்ரி (19) கைது செய்யப்பட்டார். மருத்துவ இளநிலை படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு கடந்த மே 3–ம் தேதி நடைபெற்றது. முன் கூட் டியே வினாத்தாள் கசிந்ததால் இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டது. நாடு முழுவதும் நாளை நீட் மறுதேர்வு நடைபெற உள்ளது.

இந்தச் சூழலில் ராஜஸ்தானின் பில்வாரா பகுதியை சேர்ந்த மாணவர் ஆகாஷ் சவுத்ரி, டெலிகிராம் செயலி வாயிலாக போலி நீட் வினாத்தாள்களை விற்பனை செய்வதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதன் பேரில் நேற்று அதிகாலை பில்வாராவில் உள்ள ஆகாஷ் சவுத்ரியின் வீட்டுக்கு சென்ற போலீஸார் அவரை கைது செய்தனர். அவரது மொபைல் போன், லேப் டாப் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

இதுகுறித்து இன்ஸ்பெக்டர் சுனில் கூறியதாவது: மத்திய அரசின் எஸ்–மேக் தளத்தில் "பேப்பர்மாபியா" என்றடெலிகிராம் செயலி குறித்து புகார்கள் பதிவு செய்யப்பட்டன. குறிப்பாக இந்த செயலி வாயிலாக வினாத்தாள் விற்பனை நடைபெறுகிறது என்று குற்றம் சாட்டப்பட்டது. விசாரணையில் ஆகாஷ் சவுத்ரி என்பவர் டெலிகிராம் வாயிலாக வினாத்தாள்களை விற்பனை செய்தது உறுதி செய்யப்பட்டது.

இந்தியாவில் டெலிகிராம் செயலிக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இந்த மாணவர் விபிஎன் வசதியை பயன்படுத்தி டெலிகிராம் செயலியை தொடர்ந்து பயன்படுத்தி உள்ளார். போலி வினாத் தாள்களை தலா ரூ.4,000 முதல் சில ஆயிரங்கள் வரை விற்பனை செய்திருக்கிறார்.

யுபிஐ மூலம் பணம் பெற்றிருக்கிறார். ஆகாஷ் சவுத்ரி தனிநபராக செயல்பட்டாரா அல்லது அவரது பின்னணியில் மோசடி கும்பல்கள் இருக்கிறதா என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு இன்ஸ்பெக்டர் சுனில் தெரிவித்தார்.



புதுக்குளம் கிராமத்தில் நடைபெற்று வரும் தடுப்பணை கட்டுமான பணிகளை அமைச்சர் ராஜ்குமார் ஆய்வு செய்தார்

### ஈரோடு மாவட்டத்தில்

# 12,256 பணியாளர் தேர்வு வாரியத்தால் (SSC) நடத்தப்படும் SSC CGL தேர்விற்கு காலிப்பணியிடங்களுக்குரிய அறிவிப்பு

## கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-


12,256 பணியாளர் தேர்வுவாரியத்தால்(SSC) நடத்தப்படும் SSC CGL தேர்விற்கு காலிப்பணியிடங்களுக்குரிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இப்போட்டித் தேர்வுகளுக்கான இணையவழி (மாலை 6 மணிமுதல்8மணிவரை) இலவச பயிற்சி வகுப்புகள் 29.06.2026 அன்று ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் நாள்தோறும்சிறுதேர்வுகள்(Spottest), வாராந்திர தேர்வுகள், பாடவாரியான தேர்வுகள், முழுமாதிரித்தேர்வுகள் இணைய வழியாக நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது விவரங்களை https://forms.gle/ZVYnfCiM76nBCt1s7Google Form link-இல் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கடந்த ஆண்டு இவ்வலுவலக தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக நடத்தப்பட்ட இலவச இணையவழி பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் கூட்டுறவுத் துறை உதவியாளர் பணிக்காலியிடத்திற்கான தேர்வு முடிவுகளில் 30 மாணவர்களும், HEALTH INSPECTOR GRADE-II இணையவழி பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் 42 மாணவர்களும் தேர்ச்சி பெற்று அரசுப்பணி பெற்றுள்ளனர். அதேபோல், 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற குரூப் 4 தேர்வில் 7 மாணவர்கள் தேர்ச்சி பெற்று நீதித்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை,மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்ற பல்வேறு அரசுத்துறைகளில் பணிநியமனம் பெற்றுள்ளனர். TNPSC-Gr-2 முதனிலைத் தேர்வில் 10 மாணவர்கள் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதியுள்ளனர். மேலும், தமிழ்நாடுஅரசுவேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்பட்டு வரும், மெய்நிகர்கற்றல் வலைதளத்தில் (VLS) மாணவர்கள் தங்கள் சுய விவரத்தினைUSERIDமற்றும் PASSWORD மூலம் பதிவு செய்து,பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான மென்பாடக்குறிப்புகள், மாதிரித்தேர்வுகள், தினசரி நடப்பு நிகழ்வுகள், மாதாந்திர நடப்பு நிகழ்வுகளை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாய்ப்பினை ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கின்றார். மேலும் விவரங்களுக்கு 0424-2275860,9499055943 என்ற தொலைபேசியினை தொடர்பு கொள்ளலாம்.

### தமிழகத்தில் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாக கூறி

# கோவை உக்கடம் பகுதியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்அத் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது



தமிழகத்தில் பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும் பாலியல் ரீதியான தொல்லைகள் அதிகரித்து வருவதாகவும் கூறிப்அதனை கண்டிக்கும்விதமாககோவை உக்கடம் பகுதியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்அத் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன பதாகைகளை ஏந்தி தமிழக அரசை கண்டித்தும் தமிழகஅரசு பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் கூடுதல் கவனம்செலுத்தவேண்டும் என வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பப்பட்டன.


இது குறித்து பேட்டி அளித்த தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்அத் மாநிலச் செயலாளர் முகமதுஒலி, பெண்கள் பாதுகாப்பில் தமிழக அரசு கூடுதல் கவனம்செலுத்தவேண்டும் என்றும் தமிழகம் என்பது ஒரு காலத்தில் அமைதி பூங்காவாக இருந்து வந்ததாகவும் ஆனால் சமீபகாலமாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் சிறுவர் சிறுமிகளுக்காக எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதாக தெரிவித்தார்.

சூலூர் சிறுமி பாலியல் வன்கொடுமை படுகொலை, கும்மிடிப்பூண்டி மூன்று வயது குழந்தை பாலியல் வனப்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டது ஆகியவற்றை குறிப்பிட்ட அவர் இது போன்றசெய்திகள் தொடர்ந்து வருவதாகவும் சில நேரங்களில் வழிபாட்டுத் தலங்களிலேயே பெண்கள் செல்வதற்கு அச்சப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வதற்கு பெண்கள் செல்லும் பொழுது பாலியல் ரீதியாக தொல்லைப்படுத்தப்படுவதாக தெரிவித்தார். பொள்ளாச்சி பாலியல் சம்பவத்தை சுட்டிக்காட்டிய அவர் நாளுக்கு நாள் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் இப்படியே சென்றால் தமிழகம் அமைதி பூங்காவாக இருக்காது என்று தெரிவித்தார் இது குறித்து மாநில அரசு கூடுதல்கவனம்செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் டி எ அப்பாஸ் மாவட்டச் செயலாளர் ஹக்கீம் மாவட்ட பொருளாளர் அபுதாஹிர் மாவட்ட துணைத்தலைவர் முஜிபுர் ரஹ்மான் மாவட்ட துணைச்செயலாளர்கள் ஹமித் சல்மான் நாசர் ஹஸ்ஸான் மருத்துவர் அணி நிஜாமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரவில் வீட்டிற்குள் நுழைந்து மூதாட்டிக்கு பாலியல் தொல்லை கொடுத்து கொலை முயற்சியில் ஈடுபட்ட இரு நபர்கள் கைது



ஈரோடு மாவட்டம், பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பவானி காவல் நிலையம் - இரவில் வீட்டிற்குள் நுழைந்து - தனியாக இருந்த வயதான பெண்ணை தாக்கி பொருட்களை திருடியும், பாலியல் தொல்லை கொடுத்து கொலை முயற்சியில் ஈடுபட்ட இரு நபர்கள் கைது ஈரோடு மாவட்டம், பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மண்தொழிலாளர் வீதி, மேற்கு தெருவில் உள்ள தனது வீட்டில் 74 வயது பெண்மணி தனியாக வசித்து வருகிறார். 19.06.2026 ம் தேதி அன்று இரவு,மேற்கண்ட பெண்மணி தனது வீட்டில்,வீட்டின் முன் கதவை பூட்டாமல் உறங்கி கொண்டிருந்த போது, இரு நபர்கள் வீட்டிற்குள் நுழைந்து பொருட்களை திருடிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டு விழித்து, சத்தம் போட முயன்ற பெண்மணியை இரு நபர்களும் தாக்கி பாலியல் தொல்லை செய்து, கொலை முயற்சி செய்து, பித்தளைபாத்திரங்களை திருடி சென்றுள்ளதாக வயதான பெண்ணின் மகன் முருகேசன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில், பவானி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றசெயலில் ஈடுபட்ட அதே பகுதியைச் சேர்ந்த எதிரிகள் ஹரிகுமார் மற்றும் கிரி (எ) கண்ணன் ஆகியோரை கைது செய்து களவு சொத்துகளை மீட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளது. மேலும் இதுபோன்று பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# விருத்தாச்சலம் பெரிய கோவிலில் 10 மாதங்களாக அன்னதானம் வழங்கும் சமூக ஆர்வலர் இளையராஜா



கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களின் பசியைப் போக்கும் உயரிய மனிதநேயப் பணியை சமூக ஆர்வலரும், பாஜக மாவட்ட ஓபிசி அணி பொதுச் செயலாளருமான எ.கொளப்பாக்கம் இளையராஜா கடந்த 10 மாதங்களாக தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.

ஓம் சக்தி குரூப்ஸ் & ரியல் எஸ்டேட்,எர்த் மூவர்ஸ்,நெல் அறுவடை இயந்திர சேவை, டிராக்டர்கள், டிப்பர் மற்றும் டேங்கர்ஸ் உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் அவர், தொழில் வளர்ச்சியுடன் சமூகப் பொறுப்பையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய்மற்றும்சனிக்கிழமைகளில் நடைபெறும்அன்னதானசேவையின் மூலம் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பயனடைந்து வரும் நிலையில், சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 200-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

தனது சொந்த நிதி மற்றும் நண்பர்கள், ஆதரவாளர்களின் ஒத்துழைப்புடன் இந்த சேவையை தொடர்ந்து நடத்தி வரும் இளையராஜாவின் மனிதநேயப் பணி, பக்தர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் பாராட்டைப் பெற்று வருகிறது.

# கோவையில் ஒரு ரூபாய்க்கு மதிய உணவு வழங்கி நற்பெயரை பெற்றதை தொடர்ந்து சென்னையில் துவக்கபட்டது

## இத்திட்டம் அடித்தட்டு மக்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என சென்னை வாழ் மக்கள் மகிழ்ச்சி



கோவையில் ஒரு ரூபாய்க்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை தெய்வேந்திரன் நாடார் அறக்கட்டளையினர்தொடர்ந்துசெயல்படுத்தி வருகின்றனர்..

இந்நிலையில் ஆர். தெய்வேந்திரன் நாடார், 16-வது நினைவு தினத்தை முன்நாட்டு ஒரு ரூபாய் உணவு திட்டம் சென்னையில் விரிவு படுத்தப்பட்டது..

சென்னையில் நடைபெற்றமுதன்மைநிகழ்ச்சியில், ஆர்.கே. தெய்வேந்திரன் நாடார் அறக்கட்டளையின் அறங்காவலர் அகிலேஷ் குமார் கலந்து கொண்டு, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஆர். தெய்வேந்திரன் நாடார் அவர்களின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

அவரைத் தொடர்ந்து, தெய்வேந்திரன் குரூப் ஆஃப் கம்பெனி நிறுவனங்களின் ஊழியர்களும் தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

இதனை தொடர்ந்து, ஆர். தெய்வேந்திரன் நாடார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில்,"சென்னை எழும்பூர் பகுதியில் அமைந்துள்ள ஆர். தெய்வேந்திரன் இல்லத்தில் நடைபெற்றது. இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு தினசரி ஒரு ரூபாய்க்கு மதிய உணவுவழங்கப்படஉள்ளது.ஒரு ரூபாய் உணவுத் திட்டம் அடித்தட்டு மக்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என சென்னை வாழ் மக்கள் தரப்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இதேபோல், மார்த்தாண்டம்பட்டியில் அமைந்துள்ள ஆர். தெய்வேந்திரன் நாடார் நினைவிடத்தில் அறங்காவலர் ரத்தினமாலா ராஜேஷ் குமார்,ஆதித்யா ராஜேஷ் குமார் மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் இணைந்து மலரஞ்சலி செலுத்தி, சிறப்பு வழிபாடுகளை நடத்தினர்.



மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான ராகுல் காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு, காங்கிரஸ் கமிட்டி சார்பில் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பெருமாள்சாமி தலைமையில் கோவில்பட்டியில் உள்ள அங்கன்வாடி குழந்தைகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. செண்பகவல்லி அம்மன் கோயிலில் சிறப்பு பூஜை மற்றும் முதியோர் இல்லத்தில் அன்னதானம் மற்றும் விரிவுகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதில் நகரச் செயலாளர் அருண்பாண்டியன், வட்டார தலைவர் ரமேஷ் மூர்த்தி, ஐ.என்.டி.யு.சி ராஜசேகர் , எஸ்.எம்.டி.எஸ். ராஜா, ராஜாராம், ஆழ்வார்சாமி, துரைராஜ், வேணுகோபால், சுந்தர்ராஜ் நாயக்கர், திருப்பதி ராஜா, பெத்துராஜ் மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுடலைமணி, மாரியப்பன், யோகேஷ், கார்த்தி, குமார், வேல்சாமி, தாஸ், கோபால், ஆசாரி, தட்சனாமுர்த்தி, ராஜா, பாலகுமார், EB மாரியப்பன், மற்று நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



தகவல் தொழிற்நுட்பத்துறை மற்றும் திருவள்ளூர் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு முனைவர்.ரா.குமார்அவர்களையும்பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர்திரு.ஆர்.குட்டி(எ) பிரகாசம் அவர்களையும் மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை அணிவித்து புத்தகம் பரிசாக வழங்கி திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் எடுத்துறைத்தார் நிகழ்வில் மாநிலத் துணை தலைவர் ஸ்டாலின் அவர்கள் , மாநில செய்தித் தொடர்பு செயலாளர் ஜி.அலெக்ஸ் அவர்கள் மாநில நிர்வாகி சிவக்குமார் அவர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்



கன்னியாகுமரி மாவட்டம் அந்தரபுரம் அருள்மிகு ஸ்ரீசந்தனமாரிஅம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகவிழாவில் முன்னாள் அமைச்சர், சுரேஷ்ராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் மாவட்ட திமுக கழக துணை செயலாளர்,பூதலிங்கம் , சந்தானம், குணா மற்றும் பலர் இருந்தனர்.

## Twist in Nagpur NEET aspirant's story: NTA says candidate 'selected Abu Dhabi'; Dubai was second option for exam centre

*The National Testing Agency (NTA) on Saturday issued a clarification after a student from Nagpur was allotted an examination centre*



*in Abu Dhabi for NEET UG 2026 re-examination, scheduled on June 21.*

*A senior NTA official said that the candidate had himself changed the examination city preferences through the portal, selecting Abu Dhabi as the first choice and Dubai as the second option.*

*The father of the student, Abdulla Talib, said his son had given preference to Nagpur, Wardha, and Bhandara centres for the NEET UG examination.*

*However, NTA official said that the modification on the NTA portal was done using the same IP address which was used to download the admit card for the May 3 examination.*

*"Records show that on May 21, the candidate logged in and changed his examination city preferences, selecting Abu Dhabi as the first choice and Dubai as the second. The same IP address, traced to Nagpur, was used to download his admit card for the May 3 examination," the official told HT.*

*He further said that the bank details for a refund was updated using the same IP on May 24.*

*"He (candidate) also updated his bank details for a refund on May 24, accessed the city intimation slip on June 10 and downloaded his admit card on June 16 using the same IP address," the official said.*

*In a post on X, NTA further said that on 3 occasions, the centre was changed to Abu Dhabi using candidate's credentials and twice it was previewed that the centre is Abu Dhabi.*

*The NTA said the despite receiving an "informal request on the evening of June 19" to change the centre to Nagpur, the centre was changed.*

*'Admit card downloaded on June 16, didn't flag to NTA' The NTA official said that despite downloading the admit card on June 16, the candidate or his family didn't contact the NTA or sent any mail.*

*"We have complete logs of his activities on the NEET portal. Despite downloading the admit card on June 16, neither the candidate nor his family contacted the NTA and did not send any mail regarding this. Instead, his father approached the media on June 20, just a day before the exam. We are now allotting him a centre in Nagpur, but our cyber team is examining whether the changes were made by the candidate himself or by someone who may have gained access to his account," the official said.*



வெலிங்டன் நீர்த்தேக்கத்தில் நடைபெற்று வரும் கரை பலப்படுத்தும் பணியை அமைச்சர் ராஜ்குமார் பார்வையிட்டபோது எடுத்தபடம்.

# மதுரை, சிவகங்கை ஆட்சியர்கள் உட்பட தமிழக ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்

சென்னை: மதுரை, சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் உட்பட தமிழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் உள்ள ஐஏஎஸ் அதிகாரிகள், பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாநகர போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் டி.பிரபுஷங்கர்,புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநராக நியமனம். சென்னை மாநகர சுகாதாரத்துறை இணை ஆணையர் ஜெயசீலன், சுற்றுலாத்துறை இயக்குநராகநியமனம். இவர், தமிழக சுற்றுலாத்துறை வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநராகவும் செயல்படுவார். மதுரை மாவட்ட ஆட்சியர் ஆகாஷ், சிவகங்கை மாவட்ட ஆட்சியராக நியமனம். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா மதுரை மாவட்ட ஆட்சியராக நியமனம். ஈரோடு வணிக வரித்துறை இணை ஆணையர் பொன்மணி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையராக நியமனம். இன்னசன்ட் திவ்யா, கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குநராக நியமனம். கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குநரான கவிதா ராமு, டுபிட்கோ நிர்வாக இயக்குநராக நியமனம்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரான டி.மோகன், பெருநகர போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநராக நியமனம். தமிழ்நாடு நகர்ப்புறவாழ்விட மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநரான ஷ்ரேயா பி சிங், சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை இணை ஆணையராக நியமனம். தமிழ்நாடு பைபர்நெட் கார்பரேஷன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான ரமண சரஸ்வதி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்படுகிறார். தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "இனி அப்படி நடக்காது" பேரவை நேரலை துண்டிப்புக்கு அமைச்சர் ராஜ்மோகன் விளக்கம்

சென்னை: "சட்டப்பேரவை தொடர்பான நேரலை சென்றுகொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையில்தான் உள்ளே அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தேன். சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு" என அமைச்சர் ராஜ்மோகன் விளக்கமளித்து உள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "சட்டப்பேரவை தொடர்பான நேரலைசென்றுகொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையில்தான் உள்ளே அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தேன். வெளியே ரெஸ்ட் ரூமுக்கு வந்தப்போதுதான் நேரலை ஒளிபரப்பாகவில்லைஎனசொன்னார்கள். சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி, இனி வரும் நாட்களில் நேரலை செய்யப்படும்.



வெளியில் காட்டவே முடியாத நிலை ஏற்பட்டால், அதுபோன்ற முடிவுகளை எடுக்கலாம். மக்கள் மற்றும் குழந்தைகள் பார்க்கிறார்கள் என்பதால், மோசமான மற்றும் ஆபாசமான வார்த்தைகள் வரும்போது, இது போன்று முடிவெடுக்கலாம். மத்தப்படி எல்லாம் நன்றாக தான் நடந்தது. இனி இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்" என்றார்.

பின்னர்,ராயபுரம் எல்எல்ஏ அடிக்க பாய்ந்தாரா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "அவர் எங்கே அடிக்க பாய்ந்தார்? அவர் பின்னாடி இருந்ததால், என்ன நடக்கிறது என தெரியாமல் எழுந்து நின்று பார்த்தார். வன்முறை எல்லாம் நடக்கவில்லை; அனைத்தும் நன்றாகவே சென்றது" என்று அவர் கூறினார்.

# தவெகவில் நடிகர் மன்சூர் அலிகான், இயக்குநர் ஆர்.வி.உதயகுமார் ஐக்கியம்

சென்னை: நடிகர் மன்சூர் அலிகான், இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், முன்னாள் அமைச்சர் கோமதி உள்ளிட்டோர் இன்று தவெகவில் இணைந்தனர். அப்போது, "அதிமுகவும் தவெகவும் எப்போதும் ஒன்றுதான். இரு கட்சிகளுக்கும் ஒரே கொள்கைதான்" என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் மாற்று கட்சியினர் இணைப்பு விழா நடந்தது. தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் நடிகர் மன்சூர் அலிகான், இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், முன்னாள் அமைச்சர் கோமதி உள்ளிட்டோரை வரவேற்றனர்.



இந்த நிகழ்வில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "50 ஆண்டுகள் பழமைவாதியான செங்கோட்டையனை கட்சியிலிருந்து நீக்கியது அதிமுக தலைமையின் தவறு. வந்தால் பதவி தருவோம் என கூறி வியாபாரம் செய்யும் கட்சி தவெக இல்லை.

அதிமுகவும் திமுகவும் ஒன்று சேர்ந்துவிட்டனர். அதனால் தான் அதிமுகவினர் தவெகவில் இணைகின்றனர். அதிமுகவின் 90 சதவிகித தொண்டர்கள் தவெகவை நோக்கி வர ஆரம்பித்துவிட்டனர். அதிமுகவும், தவெகவும் எப்போதும் ஒன்றுதான். இரு கட்சிகளுக்கும் ஒரே கொள்கைதான்" என்றார்.

முன்னதாக, அதிமுகவை சேர்ந்த 4 எமஎல்ஏக்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சியில் இணைந்ததை தொடர்ந்து, அதிமுக முன்னாள் எம்.பி, எம்எல்ஏக்கள் என பலரும் இணைந்தனர்.

கடந்த வாரம் பாஜகவை சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ விஜயதரணி, அதிமுக முன்னாள் அமைச்சர் பச்சைமால் உள்ளிட்ட பலர்கட்சியில் இணைந்தனர். இரண்டு நாட்களுக்கு முன்னர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்ததலைவர் சி.மகேந்திரன் தவெகவில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.